


லலிதகலா பிலிம்ஸ்

# உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்

கதை, வசனம் ... ச. அய்யாப்பிள்ளை

டைரக்ஷன்: M.A. திருமுகம்.

Arts & Coy.

## நிர்மாணித்தவர்கள்.

★

| | |
|---|---|
| கதை, வசனம் | .... ச. அய்யாப்பிள்ளை |
| இசை அமைப்பு : | .... K. V. மகாதேவன் |
| பாடல்கள் : | .... கவிஞர் கண்ணதாசன் |
| | அ. மருதகாசி |
| | T. K. சுந்தரவாத்தியார் |
| ஒளிப்பதிவு : | .... C. V. மூர்த்தி |
| ஒலிப்பதிவு பாடல்கள் : | .... T. S. ரங்கசாமி (பாரமவுண்டு) |
| | E. I. ஜீவா |
| | கண்ணன் (ரேவதி) |
| ஒலிப்பதிவு வசனம் : | .... M. D. ராஜாராம் |
| | T. R. சாரங்கன் |
| ஆர்ட் டைரக்டர் : | .... A. K. பொன்னுச்சாமி |
| உடைகள் : | .... D. அண்ணுமலை, வேலு |
| | S. கிருஷ்ணன் |
| சண்டைப் பயிற்சி | .... K. மாதவன் & பார்ட்டி |
| ஸ்டில்ஸ் : | .... K, G. வேலப்பன் |
| மேக்கப் : | .... ஹரிபாபு, K. நாராயணசாமி |
| | C. V. சங்கர், ரங்கசாமி |
| லாபரட்டரி : | .... மதராஸ் சினி லேபரேடரி |
| பிராஸஸிங் : | .... சுதிர்டே & T. ஜகதீசன் |
| புரொடக்ஷன் மானேஜர் : | .... K. M. சம்பங்கி |
| விளம்பரம் : | .... ஆர்ட் & கம்பெனி |
| எடிட்டிங் : | .... M. A. திருமுகம், M. ஜெகநாதன் |
| நடனப் பயிற்சி : | .... சோப்ரா-ராஜ்குமார் |
| | நிக்லஸ் டெஸ்மாண்டு |
| உதவி டைரக்ஷன் : | .... P. S. மாரிமுத்து |

★

டைரக்ஷன் :

**எம். ஏ. திருமுகம்.**

லலிதகலா பிலிம்ஸ்

அளிக்கும்

# "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

நடிகர்கள் :

| | |
|---|---|
| பிரேம் நஸீர் | ஓ. ஏ. கே. தேவர் |
| டி. பாலசுப்ரமணியம் | ஏ. கருணாநிதி |
| வி. ஆர். ராஜகோபால் | எஸ். எஸ். கதிரேசன் |

கொட்டாப்புளி ஜெயராமன், மாஸ்டர் கோபால், மாஸ்டர் வர்மா.

மற்றும் பலர்

நடிகைகள் :

| | |
|---|---|
| ஈ. வி. சரோஜா | பி. கண்ணாம்பா |
| எம். என். ராஜம் | காமினி |
| ராஜேஸ்வரி | ராதாபாய் |

மற்றும் பலர்

★

தயாரிப்பு :

ஸி. ஹொன்னப்ப பாகவதர்

ஸ்டுடியோ :

பாரமவுண்டு

# உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்!

**கதைச் சுருக்கம்.**

உறவாடும் அருமை — அதோடு
உள்ளத்திலே பொறுமை — அதனால்
ஊராரிடம் பெருமை — இருந்தும்
உடன் தொடர்ந்தது வறுமை — அதற்கு
மணாளன் பலியானான்...!
மங்கை தனியானாள்...!!
மக்கள் இருவரும் தவித்தார்கள் — சில நாளில்
அன்புச் செல்வங்கள் இரண்டில் மூத்தவன்
அன்னையைப் பிரிந்தான்.
மில் முதலாளி ஒருவரிடம் செல்லமாக வளர்ந்தான்.
இளையவன் அன்னையோடு ஏழ்மையில் வளர்ந்தான்.

**ஆண்டுபல ஆயின......**

சந்தர்ப்பம் இருவரையும் சந்திக்கவைத்தது.
"கூடப்பிறந்தவன்" என்றறியாமலே மூத்தவன் மில்லில்
கூலியானான் இளையவன்.

**ஆனால் விதி......?**

"ஜாதி ரோஜா" ஒன்றைப்பறிக்கும் முயற்சியிலே
இருவருக்கும் சச்சரவை ஏற்படுத்தியது...

பிரிந்தனர் இருவரும்.
“உழுது வாழ்வதே பழுது இல்லாத தொழில்”
என்று காட்டுப் பகுதியை அடைந்தான்...
அன்னையும் அவனும் சிந்திய வியர்வையால்
பொன்னையும், மணியையும் குவித்தாள் நிலமகள்...

**இந்நிலையில்...**

மில்லை மூடி தொழிலாளர்களுக்குத்
தொல்லை கொடுத்தான் மூத்தவன்.
எல்லோரும் விவசாயம் செய்ய ஏகோபித்துக் கிளம்பி விட்டார்கள்.

அன்னையோடு சேர்ந்து அரும்பாடு பட்டார்கள்...
பசியாற உண்டுகளித்தார்கள்.
மூத்தவனுக்கு இதுசேதி ஆத்திரத்தை உண்டாக்கியது.
பாட்டாளிக் கூட்டத்தை நெருப்பிலிட்டு
‘பஸ்மீகரம்’ ஆக்க முனைந்தான்.

**ஆனால்......**

அவன் ஆசைக்காதலி இந்த “ஆகாத செயலை”
அன்னைக் கூட்டத்துக்கு அறிவித்து விட்டாள்.
எனவே,
உழைப்போர் கூட்டம் உயிர்தப்பியது.
காதலியைத் தொலைத்துவிடக் கண்மூடித்திட்டமிட்டான்—
அதோடு இளையவனையும், அந்த ஜாதி ரோஜாவையும்
அழிக்க ஏற்பாடும் செய்தான்.

**விதி......**

யாருக்கு வெற்றியளித்தது——?
“நல்லோர் கெடுவதில்லை” என்ற நான்மறையின்
வாக்கு நிறைவேறிற்று...?
உழவு தழைத்ததா...?
தொழில் உயர்ந்ததா...?
பதில்...திரை சொல்லும்...!

லலிதகலா பிலிம்ஸ்

# "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

## பாடல்கள்

**1**

### வில்லுப்பாட்டு

இயற்றியது — கவிஞர் கண்ணதாசன்

பாடியவர்கள் — சி. எஸ். பாண்டியன் குழுவினர்

தந்தணத்தோம் என்று சொல்லியே
வில்லினில் பாட
வந்தருள் அறிவான தெய்வமே!

செந்தமிழர் நாட்டினிலே
தென் பாண்டி மண்டலத்து எல்லை தன்னிலே...

பொங்கி வரும் தென்குமரி
பூவிரித்துப் போட்டிருக்கும் பூமிதன்னிலே...

கஞ்சை புஞ்சை வளர்ந்திருக்கும் நல்ல மண்ணிலே
நாஞ்சில் என்ற பெயரைப் பெற்ற எங்கள் நாட்டிலே...
உற்றவர்கள் மனங்குளிர மாதம் மும்மாரி – பெய்யும் –
உத்தமர்கள் வாழுகின்ற ஒழுகிணசேரி:

ஊரிருக்கும் — பக்கம்
ஆறிருக்கும் — உண்ணச்
சோறிருக்கும் — கற்பு
சீரிருக்கும்!

செல்வத்துடன் நல்ல குணம் சேர்ந்துமிருக்கும்!

(வசனம்):—

இப்படிப்பட்ட நாகர் கோவில் என்ற ஊரிலே,...

பாட்டு

சுடலைமுத்து இசக்கியம்மாள்
தூயவர்கள் செல்வன்!
அந்த – சுந்தரனின் வாழ்க்கைதனை
வில்லுப் பாட்டில் சொல்வோம்!

M. S.

இருக்கும் வரை அள்ளி அள்ளிக்
கொடுத்துவிட்ட வள்ளல் - கொடுக்க-
இல்லை என்றுதான் - மிகவும்
வருத்தங் கொண்ட அண்ணல்!

சிரிக்க வைத்துப் பகுத்தறிவை
வளர்த்து வைத்த தோழன்—உயர்
சிந்தனையினால் உலகை
செழிக்க வைத்த வீரன்!

பாட்டெழுதும் வேளையிலே பாணனாவான்!—அதைப்
பாடிக் காட்டும்போது கலைவாணனாவான்!
நாட்டு மக்கள் கூட்டத்திற்கோர் - அண்ணனாவான்! - தன்னை
நாடி வரும் ஏழைகட்கு மன்னனாவான்!

காரினிலே ஏறிவந்து கனிவுடன்
பிள்ளைகளை அணைந்திருப்பான்!
சேரிகளைக் கண்டுவிட்டால்
சிறுவனைப் போல் குதித்து ஓடிவருவான்!

பள்ளிக்கூடம் கட்டி வைக்கப் பணம் கொடுப்பான்-நோயில்-
படுத்தவர்க்கும் மருந்து வாங்கிக் கொடுப்பான்!
நல்லவர்க்கு நிதிசேர்க்க ஓயமாட்டான்!—அங்கே
நடிப்பதற்குப் பணமும் வாங்க மாட்டான்!

சொல்லிவிட்ட காரியத்தைச் செய்து முடிப்பான்!-செய்யத்-
தோன்றாத காரியத்தைச் சொல்ல மறுப்பான்!

கஷ்டத்திலும் நஷ்டத்திலும்—அவன்
கைகொடுத்து தெய்வம்போல காக்க வருவான்!

துஷ்டர்களும் பக்கம் வந்து—அந்த
தூயவனைக் கண்டுவிட்டால் திருத்தங்கொள்வார்!

கூத்தாடி என்ற சொல்லை மாற்றியமைத்தான்—கலைக்
கூட்டத்திற்கெல்லாம் பெருமை வாங்கிக் கொடுத்தான்!
நாட்டார் தலை வணங்க ஏற்றம் படைத்தான்!—நாட்டு
மந்திரியும் கைகொடுத்து அழைக்க வைத்தான்!

கோடியிலே ஒருவனெனப் பிறந்துவிட்டான்—அவன்
கோடி சனம் பின்தொடரப் பிரிந்துவிட்டான்!

வசனநடை

சென்னை நகரத்தின் தெருக்களிலே—அந்த
சீராளன் சடலத்தை ஏந்திச்சென்றார்.

என்று வருவான்? எங்கு வருவான்?
என் தாயே! உன்எழில் வளர்த்த செல்லமகன்!

சென்ற இடம்கூறுமல் தேம்பியழ வைத்தாயே!
அள்ளிக் கொடுத்த அழகுக் கரங்களையே!...
கொள்ளியிலே வைத்தோமே!

உள்ளம் உடலெல்லாம் ஊருக்கே தந்தவனை—
கொள்ளிப் பெருங்காட்டில் கொளுத்திவிடச் சேர்ந்தோமே

பாட்டு

அந்த—பொன்னன திருமேனி!...
இந்த—பூமியிலே சாய்ந்ததையோ!....

பொல்லாத வேளைதானே?...அண்ணன்
இல்லாத பாவியானேம்!

காலன் உம்மை அழைத்தானே?...நாங்கள்
கலங்கித் தவிக்கத் தானே?...உலகம்

ஓலமிட்டுக் கதறுதையோ!...ஒரு
உத்தமனை இழந்ததென்றே!....

ஐம்பதையும்—அறுபதையும் இணைக்கும் - ஒரு—
அன்பு வழி கண்டிருந்தார்!...அந்த
அறுபது வருமுன்னே!...அண்ணே! நாங்கள்
அலறப் பிரிந்து சென்றாய்!...

அந்த—பொன்னன திருமேனி—இந்த
பூமியிலே சாய்ந்ததையோ!...

2

இயற்றியது
அ. மருதகாசி

பாடியவர்கள்
பி. சுசீலா, ராகவன் & கோஷ்டியார்

இங்கிலீஷ் நடனப் பாடல்

டோரீஸ்: ஐ கம் ப்ரம் பாரீஸ் (I Come from Paris)
மை நேம் இஸ் டோரீஸ்! (My name is Dories)

நான் வாங்கப் போறேன்
சேலம் ஹாண்டுலூம் சேரீஸ்!

பேஷனில் ஆசையும் கொண்டதாலே—இங்கே
வேஷமும் போடுறார் துரைபோலே!...

மோரீஸ் : ஊட்டியில் போடுற கோட்டு—புது
உல்லன் பனியன் ஷர்ட்டு—இதை
டூட்டிக்குப் போகையில் போட்டு
வெயில்—வாட்டுற இந்த நாட்டில்-
ஊரைச் சுத்தித் திரியருங்க
உகந்த பழக்கம் விட்டு...ஹி—ஹீ!.... (ஐ-கம்)

நீட்னஸ் டிஸிப்ளின் அங்கே—அதை
நினைப்பதும் இல்லை இங்கே - தாய்
நாட்டுப் பற்றும் நீங்கி - மே(ல்)
நாட்டுப் பொருளை வாங்கி

இருவரும்: ஆட்டம் போட்டுத் திரியருங்க
பணத்தை பகட்டைக் காட்டி...ஹி - ஹீ!... (ஐ-கம்)

3

இயற்றியது
அ. மருதகாசி

பாடியவர்கள்
ஜமுனாராணி, ராஜேஸ்வரி
& கோஷ்டியார்

### செண்பகம் - பெண்கள்

பெண்கள்: சின்ன இடை ஒடிந்திடவே தண்ணிக்குடம்
தூக்கிக்கிட்டு—
அன்ன நடைபோடுவது யாருக்காக? பெண்ணே
யாருக்காக?—

பெண்கள்: கன்னியிவள் எண்ணத்திலே—
கற்கண்டு கன்னத்திலே—
கிள்ளி விளையாடப் போகும் ஆளுக்காக - நல்ல
கெட்டி மேளம் கொட்டப் போகும் நாளுக்காக...
[சின்ன]

செண்ப : அரும்பெடுத்து அதை சரந்தொடுத்து -
உன் அழகிய கூந்தலில் முடித்து-
கரும்பை வேண்டாத எறும்பாய் இப்போது
கதைகள் ஏதேதோ படித்து

பெண்கள்: சின்ன இடை ஒடிந்திடவே....

பெண்கள்: களிப் பாக்கும் வெத்திலையும்
கள்ளியிவள் கொடுக்கையிலே...

கைவிரலைக் கடிக்கப் போகும் ஆளுக்காக - கண்கள்
பொய்க் கோபம் காட்டப் போகும் நாளுக்காக
[சின்ன]

செண்ப: பாதரசம் இசை பாடிடவே - அந்தப்
பாட்டுக்கு அபிநயம் பிடித்து

பெண்கள்: பழகும் சிங்கார மயிலின் ஒய்யாரம்
முழுதும் கண்காண நடித்து... ... [சின்ன]

4

இயற்றியது
அ. மருதகாசி

பாடியவர்
ஜமுனாராணி

## செண்பகம் பாடுவது

ஆசை நெஞ்சமே பொறுப்பாய் இன்னும் கொஞ்சமே
அன்பர் வந்திடுவார் இன்பம் மிஞ்சுமே!...
ஆசை நெஞ்சமே!... ...

நேசன் தன்னையே கண்ணாலே காணும்முன்னால் நீயே
நிலையே கொள்ளாமல் துள்ளுகின்றாயே!...
நேரில் கண்டால் ஓடுகின்றாயே - வெட்கத்தாலே
நிலைமாறித் தவித்திடவும் செய்கிறாய் வீணிலே!...
(ஆசை)

உடல்நோயும் தீரவே அவர்க்கு உண்டு இங்கே மருந்து
உனது நோய்தீர அவர்தான் மருந்து!
உறவே கொள்ளும் யோகம் வந்தாலே
உனைப்போலே-
பெரும் பாக்யம் உடையோரே இல்லையே
வாழ்விலே!...(ஆசை)

5

இயற்றியது
டி. கே. சுந்தரவாத்தியார்

பாடியவர்கள்
எஸ். சி. கிருஷ்ணன், ஏ. ரத்னமாலா

## மருக்கொழுந்து - சிங்காரம் காமிக் டூயெட்

சிங்கா: கோவிக்கிருப்பலே கோவிச்சுக்காதே-கண்ணு-
இப்போ
குட்டிக் கரணம் போடணுமா? ஊம் - எண்ணு!

கோவைப் பழம்போல் செவந்த நல்ல பொண்ணு!
—இந்தா
கொண்டாந்திருக்கேன் பொட்டுக்கடலையைத் திண்ணு!

மருக்: என்னைத் தேடி வந்தியா? என் அழகைத் தேடி வந்தியா?
பொன்னுன என் அழகு போனு நீயும் ஓடிப் போவியா?

ங்கா: என்னென்னு நெனச்சே அப்படி
ஏய்க்கிறவன் பலபேரு – உன்
இணக்கமான குணத்துக்காக
எத்தனை நாளாச் சுத்துறேன் பாரு!....

மருக்: கையைத் தொடாதே கன்னிப் பொண்ணுக்கு மாசு
–மொத
கல்யாணத்தை முடிச்சுக்கிட்டுப் பேசு!

சிங்கா: கண்ணும் கண்ணும் சேர்ந்தபோது கல்யாணம் ஆச்சு
நம்ம
கடமைக்காகத் தாலியும் கட்டுறேன் காலநேரமும்
வாச்சுது!

மருக்: உம்மனசும் எம்மனசும் ஒண்ணுப்போச்சு தன்னுலே
இனி
ஒத்துமையா வாழவேணும் ஊருக்கெல்லாம் முன்னுலே

சிங்கா: பட்டணத்துக் காதலிலும் பட்டிக்காட்டுக்காதல்–வெளிப்
பகட்டிடாது–திகட்டிடாது–படிப்புத்தான் கொஞ்சம்
–போதாது!

இருவரும்: பகட்டும் மினுக்கும் இல்லாமலே நாளெல்லாம்!–நாமும்
பத்துப் பேரைப் போல நல்லா வாழலாம்!

6

இயற்றியது
அ. மருதகாசி

பாடியவர்கள்
சீர்காழி கோவிந்தராஜன், ஜமுனாராணி

(செண்பகம் - குமார் டூயெட்)

குமார்: ஓ!... ... சிங்காரப் பூஞ்சோலை!
செண்பக மலராடும் பொன்னுன வேளை!

செண்ப: ஓ!... ... சிங்காரப் பூஞ்சோலை
செண்பக மலராடும் பொன்னுன வேளை!

குமார்: ஜில்லென்று தென்றல் வீசுதே!...அதில்
சேர்ந்து இன்பத் தேன் வாசம் நெஞ்சில் பூசுதே
செண்பகம்!...

செண்ப : ஜிவ்வென்று பாய்ந்திடுதே கெண்டை அலைமேலே...

குமார் : தெரியுது உன்கண்கள் இந்த நீரிலே அதுபோலே...
( ஓ!....சிங்கார)
அன்பாக முல்லைப் பூங்கொடி – மாமரத்தில் தாவி
ஒன்றுகும் காட்சி பாரதோ! செண்பகம்!...

செண்ப : உண்டோ நம் வாழ்வினிலே இன்பம் அதுபோலே...

குமார் : உனக்கேனோ சந்தேகம் கண்மணி இனிமேலே...

இருவரும்: ஓ!... ... சிங்காரப் பூஞ்சோலை!....
செண்பக மலராடும் பொன்னான வேளை!....

**7**

இயற்றியது
**அ. மருதகாசி**

பாடியவர்
**பி. லீலா**

**பின்னணிப் பாடல்**

மானமே பெரிதென்ற
வளையாத குணக் குன்றே வா!....
வா!.... வா!.... வா! வா!....

வா! வா! வா! மகனே!
வா! வா! வா!

நீருண்டு விளைகின்ற நிலமுண்டு இங்கே
நிலையான வளமும் உண்டு!

ஏருண்டு உன் கையில் எதிர்காலம் உருவாக்கும்
இணையில்லா பலமும் உண்டு!

பேருண்டு நீ இங்கு பெரும்பாடு பட்டாலே!
பின்னாலே பலனும் உண்டு!

சீருண்டு – நீ உண்ணச் சோறுண்டு – இயற்கையின்
செல்வங்கள் பலவும் உண்டு –
மகனே! வா!.... வா!!.... வா!!!....

நேர் நின்று 'எஜமானர் நான்' என்று சொல்லவே
நிறையப் பேர் ஊரில் உண்டு!

பார்! இன்று அத்தகையப் பண்பிலா மானிடப்
பதர்கள் இங்கே யாருண்டு?....

ஆண்டானும் இங்கில்லை – அடிமையும் இங்கில்லை!
அமைந்திடும் சமவாழ்வின் எல்லை!

வேண்டாத போட்டிப் பொறாமைகள் இல்லை!
மெய்யான சொர்க்கம் வேறில்லை!
மகனே! வா!.... வா!!.... வா!!!....

8

இயற்றியது
கவிஞர் கண்ணதாசன்

பாடியவர்கள்
ராஜேஸ்வரி & கோஷ்டியார்

### டோரீஸ் & பெண்கள்

பெண்கள்: கன்னியரே! கன்னியரே! வாருங்கடி! – இந்த
கட்டழகுப் பெண்ணைக் கொஞ்சம் பாருங்கடி!
வண்ணமிகும் வெண்ணிலவின் வடிவம்கொண்டாள்
– ஓங்கி
வளர் கலைகள் கற்றவளாய் வளருகின்றாள்–ஹை!
[கன்னி]

டோரிஸ்: பார்க்க வரும் கன்னியரே புரிகின்றதா? – இளம்
பருவ கால புதுமையெல்லாம் தெரிகின்றதா?
நாகரீகமும் மயக்கம் தருகின்றதா?—சுற்றி
நடமாடும் உலகமெல்லாம் சுழல்கின்றதா?....

பெண்கள்: ஹை!...கன்னியரே! கன்னியரே! வாருங்கடி – இந்த
கட்டழகுப் பெண்ணைக் கொஞ்சம் பாருங்கடி!
ஆயிரமாய்ப் பெண் பிறந்தும் பெருமைஇல்லை! இவள்
அன்ன நடைக்கீடு அதில் யாருமில்லை!....
வாயிதழின் புன்னகையாம் கோலங்கண்டால்–இந்த
மண்டலத்துப் பாவலர்க்கும் வார்த்தையில்லை!
ஹை!.... [கன்னி]

டோரிஸ்: சிறந்த குலத்தினிலே பிறந்தவளாய் – ஒன்றைத்–
தேடி இந்த நகரை அடைந்தவளாய்!
பிறந்த நாள் கொண்டாடி மகிழுகின்றேன்–வாழ்வைப்
பெற்றவுடன் மற்றுமொரு விருந்து வைப்பேன்!....

பெண்கள்: ஹை!.... கன்னியரே! கன்னியரே! வாருங்கடி – இந்த
கட்டழகுப் பெண்ணைக் கொஞ்சம் பாருங்கடி!

9

இயற்றியது
கவிஞர் கண்ணதாசன்

பாடியவர்கள்
எஸ். சி. கிருஷ்ணன், ராகவன்

### குமார் - சிங்காரம் டூயெட்

இருவரும்: காய்! காய்! அவரைக்காய்!
கவலைகள் எல்லாம் எட்டிக்காய்!
கஷ்டப் பாடுபட்டுக் கடுமையாய் உழைக்கும்
காளையே உன்னை வாட்டி வதைப்பவரைக் [காய்]

குமார் : அத்-திக்காய் நம் பொருள்களை எல்லாம்
அள்ளிக் குவிக்குது ஒரு கூட்டம்!

சிங்கா: இத்-திக்காய் அதில் கால்வாசி
இல்லாமல் செய்யுது மறுகூட்டம்! நீ [காய்]

குமார் : உழைப்பவன் வாழ்க்கை உயர்ந்து வருமென்ற
உண்மைப் பாடத்தைக் கத்திருக்காய்!

சிங்கா: பணம்-கொழுத்த பணக்காரன் உழைப்புக்கு ஊதியம்
கொடுக்க மறுத்ததால் அவரைக்காய்! நீ [காய்]

குமார்: பகைவர் நமக்கொரு சுண்டைக்காய் - அவர்
பகட்டும் பேச்சும் வெண்டைக்காய்!

சிங்கா : அந்த - பாவைக்காய் தரும் பணங்களை
ஏழைகள் வாழ்வுக்காய் நீ வழங்காய்! - நீ [காய்]

**10**

இயற்றியது
அ. மருதகாசி

பாடியவர்கள்
எஸ். சி. கிருஷ்ணன், ராஜேஸ்வரி கோஷ்டியார்

## கோரஸ்

குமார்: உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்! வீணில்
செண்பகம்: உண்டுகளித்திருப் போரை நிந்தனை செய்வோம்!
(உழவு)

குமார்: விழலுக்கு நீர் பாய்ச்சி மாய மாட்டோம்-வெறும்
வீணருக்கு உழைத்துடலம் ஓய மாட்டோம்!

செண்பகம்: என்னும்-இணையில்லா பாரதியின் பாட்டைப் பாடி...
எல்லோரும் வாழ்ந்திடுவோம் ஒன்றாய்க் கூடி!...
(உழவு)

குமார்: காடுவெட்டி நிலந்திருத்தி எருவுமிட்டோம்!...
செண்பகம்: பாடுபட்டு நீர் பாய்ச்சி நடவு நட்டோம்!
ஆண்கள்: கஷ்டத்திற்கு ஏற்ற பலன் கண்டுவிட்டோம்!
பெண்கள்: காலம் எல்லாம் நிம்மதியாக வாழப் போகிறோம்!...
(உழவு)

பெண்கள்: மக்களெல்லாம் வாழுவது எதனாலே?...
வயிறாரச் சோறுதரும் உழவாலே!...

ஆண்கள்: மாடுகன்று பெருகுவது எதனாலே?...
மாசில்லாத விவசாயத் தொழிலாலே!... (உழவு)

ஆண்கள்: வீடு, வாசல், விளங்குவதும் எதனாலே
மேன்மையான மேழிச் செல்வம் இதனாலே!

பெண்கள்: மானம் காக்க உடுப்பதெல்லாம் யாராலே...
உப-மானமில்லா நெசவுத்தொழில் செய்பவராலே!
(உழவு

ஐடியல் பிரிண்டர்ஸ், 97, பிராட்வே, சென்னை-1.